DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.416/2019 PW 3

Name மணிகண்டன்

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

22.12.2023.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்தணி மண்டல துணை வட்டாட்சியராக உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து நீதிபேரணை எண் 25497/2018 திருத்தணி கிராமம் புல எண் 60/3, 60/7எ ஆகியவற்றைக்கு திரு.லோகநாதன் என்பவர் எல்லையினை நிர்ணயம் செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கின் படி 22.02.2019 அன்று நில அளவை செய்த கோப்பு ந.க.எண்.2490/2018/அ6, 22.02.2019 தேதியிட்டது சமர்பித்து சாட்சியம் அளிக்கும்படி எங்களது வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பபட்டது. அது முன்னிலைக்கு திருத்தணி வட்டாட்சியர் என்னை சாட்சியம் அளித்து கோப்பை தாக்கல் செய்ய கொடுத்த அதிகார கடிதம் மற்றும் அந்த அறிக்கை வாதசாஆ 42 வரிசை ஆகும். அப்போது இருந்த வட்டாட்சியர் திருமதி.செங்கலா உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ள கடித்ததில் புல எண் 60/3, 60/7எ மற்றும் 60/7சி ஆகிய புலங்கள் அளந்து அத்துகாட்டப்பட்டு எப்எம்பி வரைப்படத்துடன் அறிக்கையும் அனுப்பியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த இணைப்பு அறிக்கையில் வரைப்படத்தில் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள இடங்களில் கட்டுமானங்கள் வீடு மற்றும் கடை இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. யாருடைய வீடு மற்றும் கடைகள் என்று குறிப்பிடபடவில்லை. புல எண் 60/7எ

மற்றும் 60/7சி கூட்டு பட்டா 4086ல் ராமகோவிந்தனின் மனைவி மற்றும் பிள்ளைகள் பெயரில் உள்ளது.

**குறுக்கு விசாரணை - இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.**